Arimaa Nokku Journal
(UGC Care Group-I Journal)
ISSN: 2320-4842
Vol-18 No. 01 January-March 2024

# சித்தர்கள் போற்றும் பெண்தெய்வம் வாலையின் வழிபாடு ஓர் பார்வை!

[1]பொ.திருப்பதி, [2]முனைவர். மா.துளசிமணி,

[1]முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு. உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, எக்ஸல் வணிகவியல் மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரபாளையம், நாமக்கல்

[2]இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு.

## முன்னுரை:

நாம் அனைவரும் அதிர்ஷ்டசாலிகள்! மிகவும் புண்ணியம் செய்தவர்கள். நாம் மட்டுமின்றி, இந்த உலகத்தில் வசிக்கின்ற அனைத்து ஜீவராசிகளும் புண்ணியம் செய்தவை. ஏனெனில் இந்தப் புனிதமான மண்ணில் தான் பலவகையான அற்புதங்களைச் செய்த அல்ல செய்து கொண்டிருக்கின்ற எண்ணற்ற சித்தர்கள் வாழ்ந்தும், வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். சித்தர்கள் என்பவர்கள் உண்மை நிலையை உணர்ந்தவர்கள். இவர்கள் களங்கம் அற்றவர்கள். சிந்தையிலே களங்கம் அற்றவர்கள் சித்தர்கள் ஆவார்கள் என்று அகத்தியர் நூறு என்ற நூல் கூறுகிறது. இத்தகைய சித்தர்களின் ரகசியப் பெண் தெய்வமாகவும், யாவரும் போற்றி வழிபாடு செய்யும் தெய்வமாகவும் இருப்பவள் தான் வாலையம்மன். வாலை என்றால் என்ன? ஏன் வாலையைப் பெண் தெய்வமாகக் கருதுகிறோம்? ஏன் வாலையை சித்தர்கள் வழிபடுகிறார்கள்? அவளின் சிறப்பு என்ன? எதற்காகச் சித்தர்கள் அவளைப் பூஜித்து வருகிறார்கள்? என்பதனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## வாலையம்மன்:

சித்தர்கள் அண்டமெல்லாம் விளங்கி இறைவனை எண்ணி தவம் செய்வர். அவ்வாறு விளங்கும் ஒப்பற்ற சக்தியாக இருக்கும் அன்னை பராசக்தியின் பல்வேறு அவதாரங்களை நாம் வணங்கி வழிபட்டு வருகின்றோம். இருப்பினும் உலகம் போற்றி பெருமைமிக்க நமது பைந்தமிழ் நாட்டில் வாழ்ந்தும், வாழ்ந்து கொண்டிருக்கும் சித்தர்கள் மற்றும் மகான்கள் இறைவனை காண இறையருள் பெற பல்வேறு பயிற்சிகளும், யோக முறைகளும் மற்றும் பூஜைகளும் செய்து வருகின்றனர். சித்தர்கள் தான் வணங்கி போற்றும் தெய்வமாக சிவனை வழிபட்டதோடு மட்டுமின்றி அவ்வழிபாட்டில் சித்தி நிலையை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு பல்வேறு சக்திகளை பெறுவதற்கும் சில ரகசிய வழிபாட்டு முறைகளை செய்து வந்தனர். அவ்வாறு அவர்கள் செய்து வந்த வழிபாட்டில் இருந்த ஒப்பற்ற சக்தியாக தோன்றியவள் தான் வாலையம்மன். அவளே சித்தர்களுக்கு எல்லாம் மூத்த தலைவியாவாள். சித்தர்கள் வணங்கும் பெண் தெய்வமாகவும், போற்றும் வகையில் மகா சக்தியாகவும் விளங்கும் வாலையைச் சித்தர்கள் வழிபட்டு வந்தனர்.

**"அவளை அறியா அமரரும் இல்லை**
**அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை**
**அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை**
**அவளன்றி ஊர்புகும் ஆறறி யேனே!".**

**- திருமந்திரம்**

## சின்னஞ்சிறு பெண் தெய்வம்

தமிழ் இலக்கியங்கள் போற்றக்கூடிய நூலாக சிற்றிலக்கியம் உள்ளது. இந்நூலில் ஒன்றான பிள்ளைத்தமிழ் பத்து பருவங்களைக் கொண்டது. அதில் ஒன்றுதான் பிள்ளைப்பருவம். ஒன்பது

வயதை உடைய பெண் பிள்ளையைப் பற்றி கூறுவதே இந்நூலின் தலையாய நோக்கமாகும். இதனை **"வாலைப்பருவம்"** என்றும் அழைப்பர். இந்த வாலையம்மன் வழிபாட்டை சிறு பெண் குழந்தை வழிபாடு என்றும் கூறுவர். பெண்மை என்றாலே தாய்மை, ஞானம், கருணை, சக்தி, வீரம், நம்பிக்கை, பற்று என்ற அனைத்து பண்புகளும் நிரம்பி இருக்கும். பெண் குழந்தை என்றாலே மதிப்பும், மரியாதையும் அனைவருக்கும் எண்ணற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கும். அப்படிப்பட்ட பெரும் மகிழ்ச்சியை அவளை வணங்கி வருபவர்களுக்குக் கொடுத்து வருகிறாள் பாலா.

வேதங்கள் போற்றும் அளவிற்கு அவள் மகா சக்தியாக விளங்குகிறாள். அவளை பாலா திரிபுரசுந்தரி என்றும் போற்றுவர். சித்தர்களும், ஞானிகளும் அவளை சின்னஞ்சிறு பெண்ணான வாலை என்பர். முக்காலமும் படைத்து உணர்ந்த மும்மூர்த்திகளும் ஆதிபராபரை என்று சொல்லிப் போற்றி வணங்குவர். ஞானம் பெற்ற சித்தர்கள் அவளை வாலை என்றும் பருவத்திற்கு ஏற்ப கன்னி என்றும் காலங்களுக்கு ஏற்ப மனோன்மணி என்றும் அவளைப் போற்றி வணங்கி வரம் பெறுவர். அவளின்றி அவள் அருள் இன்றி இறக்கவும் முடியாது இறைநிலை அடையவும் முடியாது.

## ஸ்ரீ பாலா பிறப்பு

முக்கண் ஈசனின் கோபக்கனலில் சாம்பலான அரக்கன் **"மன்மதன்"** ஆவான். இவ்வரக்கனின் சாம்பலில் தோன்றியவள் தான் பண்டாசுரன் என்னும் மற்றொரு அரக்கன். இவன் ஒரு பெண்ணாலே மட்டும் எனக்கு மரணமே தவிர வேறு யாராலும் எனக்கு மரணம் வரக்கூடாது என வரத்தை ஈசனிடம் பெற்றான். அன்று முதல் தேவர்களையும் மற்றவர்களையும் அச்சுறுத்தி கொடுமைகளை செய்து வந்தான் பண்டாசுரன். இக்கொடுமைகளை தாங்காமல் மும்மூர்த்திகளும், தேவர்களும், ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியை வணங்கினர். அரக்கனோடு போரிட்ட தேவி அன்னையை, போரில் வெல்ல முடியாத காரணத்தினால், தனது 30 மைந்தர்களையும் போருக்கு அனுப்பினான் பண்டாசுரன். அந்த அரக்கர்களை தான் கொல்வேன் என்று அன்னையின் உடலில் இருந்து சரிதமாக பிறப்பெடுத்தவள் தான் ஸ்ரீ பாலா. அவள் உருவில் சிறுமையும் ஆற்றலில் வலிமையும் கொண்டு தன் அன்னை லலிதாவிடம் ஆயுதங்களையும், கவசங்களையும் பெற்று போரில் அந்த 30 அரக்கர்களையும் கொன்று வீழ்த்தினாள் ஸ்ரீ பாலா. வெற்றியை மகிழ்விக்கும் பொருட்டு விண்ணில் இருந்து பூமாரி மழையாகப் பொழிந்தது. அன்னை பாலாவை தன் மகளாக ஏற்று எண்ணி தன்னோடு அணைத்துக் கொள்ள அப்படியே ஐக்கியம் ஆகிவிட்டாள் தேவி ஸ்ரீ பாலா என்பதை இதிகாசத்தின் மூலம் அறிய முடிகிறது.

## சித்தர்கள் வணங்கிய வேதநாயகி

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு."**

என்னும் வள்ளுவனின் சொல்லுக்கு இணங்க அகரம் இன்றி இவ்வண்டமில்லை, அகரத்தை கற்றுத் தெளியாதவன் பிணம் ஆவான். அகரம் இன்றி ஓர் எழுத்து ஆகாது. அகரம் இன்றி எவ்வித உணவும் உணவாகாது. அகரம் இன்றி மூலிகைகள், மலைகள், தவசிகள் ஏதும் இல்லை. அதுபோல பாலாவை வணங்கி வழிபடாத சித்தர்கள் யாரும் இல்லை. என்பதே மெய்யான கருத்தாகும். அவள் அருளும் கருணை இல்லாமல் எவ்வித அணுவும் பிரபஞ்சத்தில் இயங்காது. அனைத்திற்கும் உரியவளாக இருந்து எல்லாவற்றையும் ஆட்கொள்ளுபவள் தேவி பராசக்தி. அன்னையை வணங்காத தேவர்களும் இல்லை, தெய்வங்களும் இல்லை. இந்த பிரபஞ்சத்தில் அன்னை பராசக்தியை சித்தர்களும், தவசிகளும், ரிஷிகளும் முனிவர்களும் வணங்கி அவள் அருள் பெற்று மகத்தான இன்பங்களை

ISSN: 2320-4842
Vol-18 No. 01 January-March 2024

அடைந்தார்கள். கல்வி, செல்வம், வீரம் என்னும் மூன்றினையும் அன்னை வழிபாட்டில் பக்தர்கள் பயனடைந்தனர். ஏழு லோகத்தைப் படைத்த அந்த மகாசக்தி அனைவரின் உள்ளத்தில் வாலை என்னும் பெண்ணாக அமர்ந்திருக்கிறாள். அதை அறிந்து அவரை வழிபட்டு வரும் பக்தர்கள் பேரின்பம் வாழ பல கலைகளும் உருவாக்கினாள். அதனால் அவளை ஸ்ரீ வித்யை என்றும் வேத நாயகி என்றெல்லாம் அழைப்பதை நம்மால் அறிய முடிகிறது.

### வாலை மந்திரம்

நான்மறைகளும் அன்னை பராசக்தியை சின்னஞ்சிறு பெண்ணாகவும் அவளை காண முயல்வது அரிது என்றும் எடுத்துரைக்கின்றது. அன்னையை வழிபட மந்திரங்களை போதிக்கும் ரிஷிகளும், முனிவர்களும் பேரின்பம் அடைகின்றனர்.

***“ஓம்! ஐம் க்லீம் சௌம்”***

***- திரியட்சரி மந்திரம்***

***“ஓம்! ஐம் க்லீம் சௌம்***
***சௌம் க்லீம் ஐம்!”***

***- சடாட்சரி மந்திரம்***

***“ஓம் ஐம் க்லீம்***
***சௌம் க்லீம் ஐம்***
***ஐம் க்லீம் சௌம்!”***

***- நவாட்சரி மந்திரம்***

***“ஓம் ஐம் க்லீம் சௌம்***
***க்லீம் ஐம் க்லீம் ஐம் சௌ***
***ஸ்ரீம் ஹ்ரீம் ரீம் சங் ஹங்***
***ஸ்ரீ பாலபரமேஸ்வரி மமமுக கமல***
***வாஸின்யை ஸ்வாஹ...”***

-

***- வாலை சக்தி மந்திரம்***

***“தங்க ஜோதி ஞான சபை தந்தவள்***
***தரிசனம் தந்த தங்க கன்னி***
***அகில லோக நாயகி குமரி அன்னை***
***உலகுயிர்க்கெல்லாம் தாய்***
***சித்தர்கள் போற்றும் வாலை***
***எம்மை காக்கும் தெய்வம்***
***கன்னியாகுமரி பகவதி அம்மன் பொற்***
***பாதங்களில் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்!”***

***“ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த ஜோதியை***

ISSN: 2320-4842
Vol-18 No. 01 January-March 2024

*நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்துபோய்*
*வாடி வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்காள்*
*கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே*
*ஓம் நம சிவாய ஓம் ஓம் நம சிவாய*
*ஓம் நம சிவாய ஓம் ஓம் நம சிவாய!"*

*- சிவவாக்கியர்*

*"ஸ்ரீவித்யா பஞ்சதசாக்ஷாரி மஹா மந்த்ரஸ்ய*
*ஆனந்த பைரவ ரிஷி காயத்ரிச் சந்த*
*பஞ்சதஷாக்ஷரி திஷ்டாத்ரி*
*லலிதா மஹாத்ரிபுர சுந்தரீ தேவதா!"*

*"க – ஏ – ஈ – ல – ஹ்ரீம்*
*ஹ – ஸ – க – ஹ – ல – ஹ்ரீம்*
*ஸ – க – ல – ஹ்ரீம் !"*

*"கல்விநிறை வாலைப்பெண் காதலியென் றோதுகின்ற*
*செல்வியின்மேற் கும்மிதனை செப்புதற்கே நல்விசய*
*நாதனின்சொல் வேதனஞ்சு போதன்மிஞ்சி மானகஞ்ச*
*பாதம்வஞ்ச நெஞ்சினில்வை போம் !"*

என்னும் மந்திரமானது அன்னை பாலாவை வணங்க இரகசிய மந்திரமாக பஞ்சதஷாக்ஷரி மந்திரம் விளங்குகின்றது

## வாலையின் பூசை வழிபாடு

சிவனுக்கும் பார்வதிக்கும் இரு விழியாக மூல சக்தியாக என்றென்றும் நிலைத்து நிற்பவள் அன்னை பாலா. அன்னையை அடைய சித்தர்கள் கூறிய மணி, அவ்விதம், மந்திரம் என்ற மூன்று உண்மைகளை அறிந்து முப்பொருளும் ஒன்றான மெய்ப்பொருளை வாலை என்பது வள்ளலாரின் வாக்கிற்கிணங்க அவளருளை அடைய அவள் மலரடி ஒன்றையே கண்ணாகக் கருதி தான் செய்து வருவர் வாலை என்னும் பெயரைச் சொல்லி அழைப்பவர் முன் ஜென்மத்தில் விட்ட குறை தொட்ட குறை உள்ளோர் அவளின் மூலம் நன்மை பேறு பெற்றவர்கள் ஆவார். பாலாவைத் தன்னுள் நிற்பதை உணர்ந்து அவளின் அருளை அடைய, வழியை நாடி வாலையைத் தன் உள்ளத்தில் பூஜித்து வழிபடுவர்.

*"வாலையைப் பூசிக்க சித்தரானார்*
*வாலைக் கொத்தாசையாய் சிவகர்த்தரானார்*
*வேலையைப் பார்த்தல்லோ கூலி வைத்தார்*
*இந்த விதம் தெரியுமோ? வாலைப் பெண்ணே!"*
*- கொங்கணவர்*

*"வாலையை கண்டு வணங்கி நீ மைந்தா*
*காலையு மாலையுங் கருத்தாய் வணங்கினால்*
*ஆலைய மாகு மவனுருத் தானுந் தாழ்வது*
*மில்லைத் தவமதுவாமே தவமது வாக*

***சாத்துவோங் கேளு உவமான மில்லை***
***யோங்கார வட்டத்துள்! சிவமான விந்துவைச்***
***ம்மென்று பூசைசெய் நவமாந் திரேகம் நலச்சிவ***
***யோகமே முத்திக் கொழுந்து முனைகொண்ட***
***தீபம் நித்தில் பிடிக்கும் பதிவான வாசியை***
***நித்தமும் நோக்கி நேர்நிலை கண்டால் சித்தம்!"***

***"கூடப்பா துரியமென்ற வாலை வீடு***
***கூறரிய நாதர் மகேச்சுவரியே யென்பர்***
***நாடப்பா அவள் தனையே பூசை பண்ணு***
***நந்திசொல்லும் சிங்காரம் தோன்றும்***
***ஊடப்பா சிகாரவரை எல்லாம் தோன்றும்***
***ஊமையென்ற அமிர்தவெள்ளம் ஊறலாகும்***
***தேடப்பா இது தேடு காரியம் ஆகும்***
***செகத்திலே இதுவல்லவோ சித்தியாமே***
***வாமென்ற அவள் பாதம் பூசை பண்ணு***
***மற்றொன்றும் பூசை அல்ல***
***மகனேசொன்னேன்!"***

***- அகத்தியர்***

*என்னும் பாடலின் மூலம் யோகமும் ஞானமும் அன்னை அருளால் பெற்று அவளின் அன்பால் நிறைந்து வாலை பூஜை செய்து வாழ்வில் பேரானந்தம் அடைவோம்.*

### பாலாவின் கோவில்கள்

***"சக்தி சடாதரி"*** *என்று அழைக்கும் வாலை பெண்ணான பாலா திரிபுரசுந்தரியை சித்தர்கள் அகக்கண்ணாலே வழிபட்டு பூஜித்து வந்தவர்கள். உலகம் வாலையின் அடக்கம் என்பது உண்மை. அதனால் எங்கும் நிறைந்தவள் பாலாம்பிகை. பாலாவை அக கண்ணாலே வழிபட்டு வந்ததனால் கோவில்கள் குறைவாகவே எழும்பியுள்ளன. யாழ்ப்பாண குடா நாட்டின் தென்மேற்கு கரையோரமாக அமைந்திருக்கும் ஒரு முக்கோண வடிவில் உள்ள ஒரு கிராமம். இது வட்டுக்கோட்டை பகுதியில் உள்ள* ***"அராலி கிழக்கு"*** *என்ற இடத்தில் பாலாவின் கோவில் அமைந்துள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள* ***"உடன்குடி"*** *என்னும் ஊருக்கு அருகாமையில் கொம்மடிக் கோட்டையில் வாலை அம்மன் வீற்றிருக்கின்றாள். அகத்தியர் உட்பட மேலும் பல சித்த பெருமக்களும் வாலையை வழிபட்டு போற்றியும் பாடியுள்ளனர்.*

### முடிவுரை

*நாம் வாழும் இவ்வுலகில் பல்வேறு துன்பங்களை அடைகின்றோம். துன்பங்கள் நீங்கி நன்றாக வாழ வழி காட்டுபவர் தான் பாலாம்பிகை. அவளை வணங்கி பாதம் பணிந்து சரணாகதி அடைந்தாலே எல்லா தொல்லைகளும் நீங்கி நற்பெயர் பெற்று இன்புற்று வாழலாம்.*

***"அருள் மிகும் தேவி அன்னை பாலா திரிபுரசுந்தரி சரணம்***

ISSN: 2320-4842
Vol-18 No. 01 January-March 2024

*இருதலை நீக்கும் தாயே பாலா திரிபுரசுந்தரி சரணம்*
*திரிபுரசுந்தரி சரணம் - பாலா திரிபுரசுந்தரி சரணம். (அன்னை).*
*மாரியை பொழியும் மாரியும் நீயே அன்புடன் வருவாய் அம்மா*
*காரியம் நடத்திடும் காளியும் நீயே இன்பமும் தருவாய் அம்மா*
*நாளும் கோளும் ஏது - சிவ நாயகி துணை வரும் போது. (அன்னை).*
*அருள் நவராத்திரி ஒளி விளக்கேற்றி*
*சரணடைந்தோமே தேவி."*

***********

## துணைநூல் பட்டியல்


*1. சித்தர்களின் பாடல்களில் நிலையாமைச் செய்திகள். ச.பிரியா , முனைவர் பட்டஆய்வாளர், தமிழாய்வுத்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரி, பெரம்பலூர்.*

*2. கணபதி,டி.என். 2005, தமிழ்ச் சித்தர் மரபு, சென்னை -83, ரவி பப்ளிகேஷன்ஸ்.*

*3. மாணிக்க வாசகம், இரா., 1988, பதினெண் சித்தர்கள் பரிபாஷை அகராதி, திருமகள் நிலையம், சென்னை-17.*

*4. வேலுப்பிள்ளை,ஆ. 2002, தமிழ் இலக்கியத்தின் காலமும் கருத்தும், பாரி நிலையம், சென்னை.*